கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவட்ட செயலாளர் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி 11 ஆம் வட்டாரம், வரிமதிப்பீட்டு இல. 89, காத்தான்குடி மாநகர சபை எல்லைக்குட்பட்ட புதிய காத்தான்குடி, விர்தஸ் நகர், எதுகல் கிராம அலுவலர் பிரிவில் எதுகல் கிராமத்தில் அமைந்துள்ள ''முருக்கடி முனை வளவு'' என்றழைக்கப் படுகின்ற காணி பரிமாணம் பி442 பக்கம் 196 இல் பதிவுசெய்யப்பட்ட ஒரு பகுதியான ரீ. பீ. 118672 இல் துண்டு இல. 10666 ''எதுகல்'' என்று அழைக்கப்படுகின்ற காணி பரிமாணம்/பக்கம் பி414 பக்கங்கள் 89, 90, 92 முறையாகப் பதிவுசெய்யப்பட்ட மூன்று காணிகள் அண்மையில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ. கே. திஸ்ஸ வீரசிங்க என்பவரால் 2013.07.26 ஆந் திகதி மீளளவீடு செய்யப்பட்டு நிலவரைபட இல. 648/2013 இல் விபரிக்கப்பட்டுள்ளபடி சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்ட காணி வடக்கிலிருந்து தெற்காக, கிழக்கில் 330 அடி, மேற்கு 430 அடி கிழக்கிலிருந்து மேற்காகவும், வடக்கில் 340 அடி, தெற்கில் 260 அடி கிழக்கிலிருந்து வடக்கு இறுதிவரை 100 அடி கிழக்கு வரை 80 அடியைக் கொண்டுள்ளதுடன் மற்றும் அங்கு காணப்படும் அனைத்துடனும் இரண்டு ஏக்கர் மூன்று றூட் இருபத்தைந்து தசம் நான்கு இரண்டு பேர்ச் (2ஏ. 3றூ. 25.42பே.) அல்லது 1.772 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2015, ஒற்றோபர் 15 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் என்னால் விற்பனை செய்யப்படும்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்**.- மட்டக்களப்பிலிருந்து சுமார் 5 கி. மீ. வரை தூரம் உள்ள புதிய கல்முனை வீதி மார்க்கமாகச் சென்று இடது பக்கத்திலுள்ள டெலிகொம் வீதியால் திரும்பி சுமார் 900 மீ. சென்று வலது பக்கத்திலுள்ள கடற்கரை வீதியால் திரும்பினால் வர்தஸ் நகர் உள்ளதுடன் 300 மீ. தூரத்தில் குறிக்கப்பட்ட சொத்து வீதியில் வலப்பக்க எல்லையில் அமைந்திருக்கும்.

**இரண்டாவது ஏல விற்பனை**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவட்ட செயலாளர் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி 2 ஆம் வட்டாரம், வரிமதிப்பீட்டு இல. 237, 237/1/1, 237/1/2, காத்தான்குடி மாநகர சபை எல்லைக்குட்பட்ட புதிய மட்டக்களப்பு வீதியில் காத்தான்குடி பிரிவு 2, கிராம அலுவலர் பிரிவில், பிரிவு இல. 2 காத்தான்குடி கிராமத்தில் அமைந்துள்ள காணி பரிமாணம் பி552 பக்கம் 204 இல் பதிவுசெய்யப்பட்ட தெற்குப் பகுதி பரிமாணம் பி472 பக்கம் 165 இல் மற்றும் பி480, பக்கம் 89 இல் முறையாகப் பதிவுசெய்யப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளம ிடப்பட்ட காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். நஜுவுடீன் என்பவரால் 2013.05.08 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. ஏஎம்என்/13/கேரீரீ/2885 அண்மையில் மீளளவீடு செய்யப்பட்ட விபரம் வடக்கிலிருந்து தெற்காக, கிழக்கில் 9 வெதம் (fathom) மற்றும் 1 அடி 6 அங்குலம், மேற்கு 8 வெதம் மற்றும் 2 அங்குலம், கிழக்கிலிருந்து மேற்காக 12 வெதம் மற்றும் ஒன்பது தசம் இரண்டு ஒன்பது பேர்ச் (0ஏ. 0றூ. 9.29பே.) அல்லது 0.0235 ஹெக்யெடர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2015, ஒற்றோபர் 15 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் என்னால் விற்பனை செய்யப்படும்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்**.- மட்டக்களப்பில் உள்ள கோட்டமுனை வீதி பாலத்திலிருந்து கல்முனை வீதி மார்க்கமாக சுமார் 5 1/2 கி. மீ. தூரத்தில் காத்தான்குடி கடற்கரை அமானா வங்கிக்குச் செல்லுமுன் குறிக்கப்பட்ட சொத்து வீதியில் வலப்பக்க எல்லையில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2015.07.30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2015.07.15 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'', ''லங்காதீப'' மற்றும் 2015.07.17 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகை களையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா.

விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீயில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட் களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன்வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை ''பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, இல. 90, காலி வீதி, கொழும்பு 03'' என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக் கொள்ளவும் முடியும். தொ.பே. இல. 2456475, 2456476.

''மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறிவித்தலின்றி இரத்துச்செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்.''

துசித கருணாரத்ன (ச.நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரீ அன்ட் எச் ஒக்சன்,
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 011-3068185, 2572940.

9-612

---

**டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ**

(முன்னர் வரையறுக்கப்பட்ட டீஎப்சீசீ வர்தன வங்கி என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை**

***710 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்***

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே, அதிகாரி பற்று, உடுபில மற்றும் நாரன்வலயில் அமைந்துள்ள ஹொரகஹ லந்த எனவும் ஹோரஹேனவத்த எனவும் அழைக்கப்படும் (மேற்குறிப்பிடப்பட்ட 1404 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய, இந்தக் காணி ஹொரகஹலந்த, ஹோரஹேனவத்த மற்றும்**

**மஹவிட்டலந்த எனவும் அழைக்கப்படும்) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்க அவர்களால் வரையப்பட்ட 1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதியிடப்பட்ட 1404 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு 43 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப் பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு, அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக கம்பஹா காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 13.60பே.)**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே, அதிகாரி பற்று, உடுபில மற்றும் நாரன்வலயில் அமைந்துள்ள ஹொரகஹ லந்த எனவும் ஹோரஹேனவத்த எனவும் அழைக்கப்படும் (மேற்குறிப்பிடப்பட்ட 1404 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய, இந்தக் காணி ஹொரகஹலந்த, ஹோரஹேனவத்த மற்றும் மஹரிட்டலந்த எனவும் அழைக்கப்படும்) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்க அவர்களால் வரையப்பட்ட 1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியிடப்பட்ட 1404 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு 265 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு,.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 3றூ. 07.69பே.)**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே, அதிகாரி பற்று, உடுபில மற்றும் நாரன்வலயில் அமைந்துள்ள ஹொரகஹ லந்த எனவும் ஹோரஹேனவத்த எனவும் அழைக்கப்படும் (மேற்குறிப்பிடப்பட்ட 1404 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய, இந்தக் காணி ஹொரகஹலந்த, ஹோரஹேனவத்த மற்றும் மஹரிட்டலந்த எனவும் அழைக்கப்படும்) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்க அவர்களால் வரையப்பட்ட 1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியிடப்பட்ட 1404 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு 267 (அகழி) எனக் குறிப்பிடப் பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித் துண்டு.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 08.38பே.)**

*(கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பிரதீபா பீ. விக்கிரமதிலக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதியிடப்பட்ட 710 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் கடவத்தையில் ''கடவத்தை ஜுக்கி சென்டர்'' எனும் பெயரில் தனியுரிமைத்துவத்துடன் வியாபாரத்தை நடத்தி வரும் சமிந்த புஷ்பகுமாரசிரி டிலமோட் அவர்களால் டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ (முன்னர் வ/ப டீஎப்சீசீ வர்தன வங்கி) க்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டீஎப்சீசீ வர்தன வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை ந. ப. 12.00 மணிக்கு எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 78,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீயின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

''முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.''

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
123 வருட கால மகோன்னத
சேவையுடன்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680<br>011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

9-664

---

**டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை**

***712 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்***

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே, அதிகாரி பற்று, உடுபில மற்றும் நாரன்வலயில் அமைந்துள்ள ஹொரகஹ லந்த எனவும் ஹோரஹேனவத்த எனவும் அழைக்கப்படும் (மேற்குறிப்பிடப்பட்ட 1404 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய, இந்தக் காணி ஹொரகஹலந்த, ஹோரஹேனவத்த மற்றும் மஹரிட்டலந்த எனவும் அழைக்கப்படும்) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்க அவர்களால் வரையப்பட்ட**

**1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியிடப்பட்ட 1404 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு 227 எனக் குறிப்பிடப் பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித் துண்டு, அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக கம்பஹா காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 13.96பே.)**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே, அதிகாரி பற்று, உடுபில மற்றும் நாரன்வலயில் அமைந்துள்ள ஹொரகஹ லந்த எனவும் ஹோரஹேனவத்த எனவும் அழைக்கப்படும் (மேற்குறிப்பிடப்பட்ட 1404 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய, இந்தக் காணி ஹொரகஹலந்த எனவும் ஹோரஹேனவத்த மற்றும் மஹரிட்டலந்த எனவும் அழைக்கப்படும்) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்க அவர்களால் வரையப்பட்ட 1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியிடப்பட்ட 1404 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு 238 எனக் குறிப்பிடப் பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித் துண்டு.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 31பே.)**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே, அதிகாரி பற்று, உடுபில மற்றும் நாரன்வலயில் அமைந்துள்ள ஹொரகஹ லந்த எனவும் ஹோரஹேனவத்த எனவும் அழைக்கப்படும் (மேற்குறிப்பிடப்பட்ட 1404 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய, இந்தக் காணி ஹொரகஹலந்த எனவும் ஹோரஹேனவத்த மற்றும் மஹரிட்டலந்த எனவும் அழைக்கப்படும்) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்க அவர்களால் வரையப்பட்ட 1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியிடப்பட்ட 1404 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு 244 எனக் குறிப்பிடப் பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித் துண்டு கம்பஹா காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 22.03பே.)**

*(கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பிரதீபா பீ. விக்கிரமதிலக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதியிடப்பட்ட 712 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் கடவத்தையில் "கடவத்தை ஜுக்கி சென்டர்" எனும் பெயரில் தனியுரிமைத்துவத்துடன் வியாபாரத்தை நடத்தி வரும் சமிந்த புஷ்பகுமாரசிரி டிலமோட் அவர்களால் டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ (முன்னர் வ/ப டீஎப்சீசீ வர்தன வங்கி) க்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டீஎப்சீசீ வர்தன வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 1.00 மணிக்கு எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 86,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப் படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீயின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
123 வருட கால மகோன்னத
சேவையுடன்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

9-665

---

**டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துக்கள் பகிரங்க ஏல விற்பனை**

***707 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்***

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே, அதிகாரி பற்று, உடுபில மற்றும் நாரன்வலயில் அமைந்துள்ள ஹொரகஹ லந்த எனவும் ஹோரஹேனவத்த எனவும் அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஏ. பீ. ஏ. ரஞ்சித் அவர் களால் வரையப்பட்ட 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதியிடப்பட்ட 1876 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு ஏ எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான**

**காணித்துண்டு, அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக கம்பஹா காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 20.96பே.)**

*(பிரசித்த நொத்தாரிசு கே. டீ. ஜீ. வீரசிங்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதியிடப்பட்ட 1397 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 4 மற்றும் 5 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரசித்த நொத்தாரிசு கே. டீ. ஜீ. வீரசிங்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியிடப்பட்ட 1404 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 255, 265 மற்றும் 253 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகள் ஊடாகச் செல்லும் பாதை உரிமையுடன். கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பிரதீப் பீ. விக்கிரமதிலக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதியிடப்பட்ட 707 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் கடவத்தையில் "கடவத்தை ஜுக்கி சென்டர்" எனும் பெயரில் தனியுரிமைத்துவத்துடன் வியாபாரத்தை நடத்தி வரும் சமிந்த புஷ்பகுமாரசிரி டிலமோட் அவர்களால் டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ (முன்னர் வ/ப டீஎப்சீசீ வர்தன வங்கி) க்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீயினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 78,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப் படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீயின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
123 வருட கால மகோன்னத
சேவையுடன்.

*தலைமை அலுவலகம் :* 24, டொரிங்டன் வீதி, கண்டி.
தொலைபேசி : 081-2227593
தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371
மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk

*நகர அலுவலகமும் காட்சியறையும் :* 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5.
தொலைபேசி : 011-2502680
011-2585408
தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176
மின்-அஞ்சல் : schokman@samera1892.com

இணையத்தளம் : www.sandslanka.com

9-666

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 72754009 மற்றும் 74172111

உருத்திரா ஏஜன்சி பங்குதாரர்கள் திரு. ஆர். சந்திரசேகரம் மற்றும் திருமதி எல். சந்திரசேகரம் ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.07.30 ஆந் திகதிய 1926 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2015.07.20 ஆந் திகதி திங்கட்கிழமை "டெய்லி நியூஸ்", "தினகரன்" மற்றும் "தினமின" ஆகிய பத்திரிகை களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ. அன்ட் எச் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2015.10.31 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அளுத்குரு கோறளை ராகம் பற்றுவில் வத்தளை, மாபோல நகர சபை எல்லைகளுள் வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் 179 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் குடா ஏதன்டவில் நீர்கொழும்பு வீதியில் அமைந்த "கஹட்டகஹவத்த மில்லகஹவத்த தெல்கஹவத்த மற்றும் கஹட்டகஹஓவிட்ட" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. சிவசுந்தரம் தயாரித்த 1977, செத்தெம்பர் 20 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1043F இல் விபரித்த துண்டு $1^5$ என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : உத்தரவுபெற்ற

நிலஅளவையாளர் வீ. சிவசுந்தரம் தயாரித்த 1971, பெப்புருவரி 10 ஆந் திகதியிட்ட வரைபடம் இல.1043 இல் துண்டு A (பாதைக்கு ஒதுக்கப்பட்டது); கிழக்கு : வரைபடம் இல. 1043 இல் துண்டு H உம் ; தெற்கு : வரிமதிப்பிலக்கங்கள் 38/2 மற்றும் 42 (K.E. R.) கொண்ட நிலமனை; மேற்கு : துண்டுகள் 13 உம், 14 உம் எல்லைளாகக் கொண்டு ஒரு றூட் பத்து தசம் சைபர் ஒன்பது பேர்ச் (0ஏ. 1றூ. 10.09பே.) விஸ்தீரணமுடையது. இக் காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் B 776/113 இல் பதிவு செய்யப்பட்டது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. சந்திரசேன தயாரித்த 1994, ஓகத்து 27 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல.167/94 இன் பிரகாரம் மேற்குறிப்பிட்ட காணி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நீர்கொழும்பு வீதியில் அமைந்த “கஹட்டகஹவத்த மில்லகஹவத்த தெல்கஹவத்த மற்றும் கஹட்டகஹஒவிட்ட” என அழைக்கப்படும் காணியின் வரைபடம் இல. 167/94 இல் விபரித்த துண்டு A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : சென்ட் அந்தனீஸ் பாதையும் ; கிழக்கு : சென்ட் அந்தனீஸ் பாதை வரிமதிப்பிலக்கம் 118/35 ஐக் கொண்ட நிலமனையும் ; தெற்கு: வரிமதிப்பீட்டிலக்கம் 38/23 ஐக் கொண்ட நிலமனை மற்றும் 42 குடா ஏதன்ட பாதையும் ; மேற்கு : சென்ட் அந்தனீஸ் பாதை வரிமதிப்பிலக்கம் 115/43A மற்றும் 118/37ஐக் கொண்ட நிலமனையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 167/94 இன்படி நாற்பத்தொன்பது தசம் மூன்று ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 49.35பே.) அல்லது சைபர் தசம் ஒன்று இரண்டு நான்கு எட்டு ஹெக்டேயர்கள் (ஹெக்டேயர் 0.1248) விஸ்தீரணமுடையது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) ஜே. ஞானசம்பந்தன்,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
வெள்ளவத்தை.

9-565

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

ரிஜ்வே லேண்ட் (பிறைவேட்) லிமிட்டெட் - கணக்கு இல. 0057 1000 1687

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2014.08.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2015.09.04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2015.08.20 ஆந் திகதிய ‘‘திவயின’’, ‘‘ஐலன்ட்’’, ‘‘தினக்குரல்’’ பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சத்து இருபதாயிரத்து தொளாயிரத்து அறுபத்தொன்பது ரூபா முப்பத்திரண்டு சதம் (ரூ. 1,25,20,969.32) 2014, ஓகத்து 13 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே பதினெட்டு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா (ரூ. 1,18,40,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்தொன்பது வீதம் (19%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2015.10.16 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

1. மேல் மாகாணம், ரைகம் கோரளை கும்புக்கே பத்துவின், ஹொரணை நகர சபை எல்லைகளுக்குள், ஹொரணை வோட் இல. 3 இரத்தினபுரி வீதியில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 103 ஐ ஏற்ற ‘‘அம்பலம்ஹேன’’ என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே எம். டபிள்யூ. சமரநாயக்க என்வரால் தயாரிக்கப்பட்ட 2003, ஓகத்து 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 1953 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 3A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : வரிமதிப்பீட்டு இல. 99 இரத்தினபுரி வீதி (இல. 316 ஐ ஏற்ற வரைபடத்தின் லொட் 2) மற்றும் இல. 316 ஐ ஏற்ற வரைபடத்தில் லொட் 5; கிழக்கு : இல. 316 ஐ ஏற்ற வரைபடத்தின் லொட் 5 மற்றும் வரிமதிப்பீட்டு இல. 103 இரத்தினபுரி வீதி (இல. 316 ஐ ஏற்ற வரைபடத்தின் லொட் 4) ; தெற்கு : வரிமததிப்பீட்டு இல. 103 இரத்தினபுரி வீதி (இல. 316 ஐ ஏற்ற வரைபடத்தின் லொட் 4) மற்றும் 3B ; மேற்கு வரிமதிப்பீட்டு இல. 99 இரத்தினபுரி வீதி (இல. 316 ஐ ஏற்ற வரைபடத்தின் லொட் 2) எனும் இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஆறு பேர்ச் (0ஏ. 0றூ. 6பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1953 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹொரணை எனும் காணிப்பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் C 295/289 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. கூறப்பட்ட ஹொரணை வோட் இல. 3 இரத்தினபுரி வீதியில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 101/1 ஐ ஏற்ற ‘‘அம்பலம்ஹேன’’ என்றழைக்கப்படும் காணிக்கு இல. 1953 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 3B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : லொட் 3A; கிழக்கு : வரிமதிப்பீட்டு இல. 103 இரத்தினபுரி வீதி (இல. 316 ஐ ஏற்ற வரைபடத்தின் லொட் 4) ; தெற்கு : இரத்தினபுரி வீதி மற்றும் ; மேற்கு : வரிமதிப்பீட்டு இல. 99 இரத்தினபுரி வீதி (இல. 316 ஐ ஏற்ற வரைபடத்தின் லொட் 2) எனும் இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒன்று தசம் ஆறு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 1.65பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன்

கூறப்பட்ட இல. 1953 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹொரணை காணிப்பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் C 295/290 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9-653

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – யாழ்ப்பாணம் (மெட்ரோ கிளை)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கைதடி-மானிப்பாய் பாதையில் கைதடி கிராமத்தில் அமைந்துள்ள கடுகன்தான்புளம் எனும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. புஷ்பராஜா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003.12.09 ஆந் திகதிய 2244 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் வீட்டுக் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும்.**

**(பரப்பளவு : 50 பேர்ச்சஸ் (05 எல்எம்எஸ்வீசீ)**

*இவ்வாதனம் திரு. கந்தசாமி இராஜேஸ்வரன் மற்றும் திருமதி கமலினி இராஜேஸ்வரன் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.*

**ஆதனத்தை வந்தடைதல்.**- கைதடி சந்தியிலிருந்து கைதடி-மானிப்பாய் பாதையில் கைதடி தபால் நிலையம் வரை சுமார் 3/4 கி. மீ. தூரம் சென்று கைதடி வடக்குப் பாதைக்குள் பிரவேசித்து சுமார் 1/2 கி. மீ. சென்றால் சந்திக்கும் நாற்சந்திக்கு அண்மையில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனம் 2015.10.14 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2015.04.17 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2015.08.27 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'', ''லக்பிம'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும். விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 2015.09.25 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏலவிற்பனையாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10வீதம் (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90 வீதம் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- பதில் பொது முகாமையாளர் (கடன் அறவிடுதல்) , ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2210595, 071-4755974, 071-8446374, 077-7761706.

9-640

---

## மக்கள் வங்கி - மாவத்தகம கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 29டீ ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉட வில்லி ஹத்பத்துவ, கந்தஹய கோரலை, எல்லாகொன்ன அரம்பொல எனும் கிராமங்களில் அமைந்துள்ள 'எல்லாகொன்ன வத்தை' என்ற காணிக்கு 2007.02.01 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 207030 ஆம் இலக்க வரைபடத்தின் 1 ஆம் இலக்க (0ஏ. 0றூ. 19.70பே.) விஸ்தீரணமுடைய காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்கலாக மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் என்னால் 2015.10.06 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் ஏல விற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2012.12.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2012.12.20 ஆந் திகதிய ''தினமின'', ''டெயிலி நியூஸ்'' மற்றும் ''தினகரன்'' பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டுள்ள ஏல விற்பனை அறிவித்தலுக்கு உங்கள் கவனத்தைச் செலுத்தவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை.**- மாவத்தகம நகரத்திலிருந்து பரந்தன பாதையில் 2 3/4 கிலோ மீற்றர் அளவு சென்று பொத்துபோவ சிக்கன கூட்டுறவு வங்கிக்கு அருகால் வலது பக்கமாக உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான கிரவல் பாதையில் 200 மீற்றர் அளவு சென்றவுடன் பாதையின் இடது பக்கமாக இந்தக் காணி அமைந்துள்ளது.

**பணம் செலுத்தும் முறை**.- ஏல விற்னையின் இறுதியில் ஆதனத்தை வாங்கியவர் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு பணத்தைச் செலுத்துதல் வேண்டும் :-

(1) வாங்கிய விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) மாகாண அதிகார சபையின் வரியாக 1% (ஒரு வீதம்) ;
(3) ஏல விற்பனை தரகாக விற்பனை விலையின் 2 1/2 வீதம் (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) எழுதுவினைஞர், அறிவிப்பாளர் கட்டணமாக 500 ரூபா ;
(5) விற்பனைச் செலவுகள், வேறும் கட்டணங்கள் இருப்பின் அந்தப் பணம் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

வாங்கிய விலையின் மிகுதி 90% ஆன பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கியின் குருநாகல் பிரதேச பிரதான அலுவலகத்தின் பிரதேச முகாமையாளரிடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. 037-2222453, 037-2222572, 037-2231355 ; தொலைநகல் இல. 037-2225400.

உரிமைப்பத்திரம் வேறு விபரங்களை இல. 210, கொழும்பு வீதி, வெஹெரையில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பிரதேச பிரதான அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். மேற்கண்டவாறு பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தாவிடின் ஏற்கனவே செலுத்திய கொள்வனவு விலையின் 10% பணத்தை திருப்பிச் செலுத்தாமல் விடவும், மீண்டும் ஆதனத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

டபிள்யூ. எம். ஐ. கல்லேல்ல,
நீதிமன்ற ஆணையாளர்,
அதிகாரம்பெற்ற ஏல விற்பனையாளர்,
மதிப்பீட்டாளர்.

இல. 28, புதிய சட்டத்தரணிகள் வர்த்தக
கட்டிடத் தொகுதி,
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. : 071-8125581.

9-609

---

## பிரசித்த காணி ஏல விற்பனை

சிலாபம் மாவட்ட நீதிமன்றம்

மக்கள் வங்கி, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை, கொழும்பு 2

................. வாதி.

வழக்கு இல.
4379/MB
தன்மை : ஈடு

எதிர்வாதி

மகமாலிமகே அன்டனி கிறிஸ்டி பேர்னாட் பெர்னாண்டோ, இல. 504/8, பருதல் பொல பள்ளி அருகில், தொடுவாவ

.................. பிரதிவாதி.

மேற்குறிப்பிட்ட இலக்கத்தை உடைய வழக்கின் 2014.04.02 ஆந் திகதி வெளியிடப்பட்ட தீர்ப்புக்கு அமைய மேற்கூறப்பட்ட வழக்கின் பிரதிவாதியினால் வாதிக்குச் செலுத்தப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்ட 6,26,866.38 ரூபா தொகை மற்றும் 4,21,607.22 ரூபா தொகை மீது 2011.02.20 ஆந் திகதி முதல் 23% வருடாந்த வட்டி அடிப்படையில் மொத்தத் தொகை செலுத்தப்படும் நாள் வரை 23% வருடாந்த வட்டியையும், ஏனைய கட்டணங்களையும் வாதியினால் அறவிட்டுக்கொள்ள உரிமையுள்ளதனால் சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆர். ஏ. எஸ். தசநாயக்க அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 6010 மற்றும் 2007.12.24 ஆந் திகதிய அடகுப் பத்திரத்தை மையமாகக் கொண்டு மேலே கூறப்பட்ட தொகை 2011.02.20 ஆந் திகதிக்கு 6,26,866.38 ரூபா தொகையையும், 4,21,607.22 ரூபா தொகையையும் 2011.02.20 ஆந் திகதிக்கு 23% வருடாந்த வட்டி அடிப்படையில் மொத்தத் தொகையையும் செலுத்தப்படும் நாள்வரை 23% வருடாந்த வட்டியையும், ஏனைய கட்டணங்களையும் பிரதிவாதியிடம் அறவிட்டுக்கொள்ள 2015.05.08 ஆந் திகதி எமக்களிக்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய இங்கு பின் குறிப்பிடப்படும் இணைப்பில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ள சொத்து மற்றும் அந்தச் சொத்துக்கான அனைத்து உரிமைகளையும், இணைப்புக்களையும் 2015, ஒற்றோபர் 14 ஆந் திகதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு சொத்து அமைந்துள்ள இடத்தில் எம்மால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றோம்.

### இணைப்பு

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் காணிப்பதிவகப் பிரிவுக்கு உட்பட்ட வடக்கு பிட்டிகல் கோரளே, யகம்பற்று, மாதம்பே பிரதேச செயலகப் பிரிவுக்கு உரித்தான சிலாபம் பிரதேச சபை எல்லைக்குள் மெல்லவாகார கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட மெல்லவாகார எனும் கிராமத்தில் அமைந்துள்ள செல்லம்பத்தக என்ற காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஏ. என். குணசிரி அவர்களால் 2007.02.23 ஆந் திகதியிடப்பட்டு அளவிட்டுத் தயாரிக்கப்பட்ட 5060 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 42 என்ற காணியை எல்லையாகக் கொண்ட- வடக்கு : மேற்கூறப்பட்ட வரைபடத்தில் துண்டு 14 என்ற பகுதியும் ; கிழக்கு : வீட்டிலிருந்து பிரதான பாதை வரை செல்லும் நகர சபைப் பாதையும் ; தெற்கு : மேற்கூறப்பட்ட காணியின் துண்டு 13, 30 அடி அகலமான பாதையும் ; மேற்கு : மேற்கூறப்பட்ட வரைபடத்தில் துண்டு 41 என்ற பகுதியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்குள் 19.06 பேர்ச் (0ஏ. 0றூ. 19.06பே.) அதாவது ஹெக்டெயர் சைபர் தசம் சைபர் நான்கு எட்டு இரண்டு (ஹெக்டெயர் 0.0482) அளவான காணி மற்றும் அதற்கு உரித்தான மரம், செடி, கொடிகள், பழ வகைகள், கட்டடங்கள் ஆகிய அனைத்தும் இதில் உள்ளடக்கப்படும். இது சிலாபம் காணிப்பதிவகப் பிரிவில் எப் 01/38 எனும் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட காணிக்கு பிரவேசிக்க மேலே கூறப்பட்ட துண்டு 13 என்ற 30 அடி அகலமான பாதையைப் பொதுவாகப் பயன்படுத்தும் வீதி உரிமை இத்துடன் கிடைக்கிறது.

**ஆதனத்தைச் சென்றடைதல்**.- மாதம்பே-குளியாப்பிட்டி வீதியில் சுமார் 100 மீற்றர் தூரம் வரை சென்று, வலது பக்கமாக உள்ள பாவித்த லேனா வீட்டுக்கு அருகில் வலது பக்கமாக உள்ள பாதையில் சென்றதும் வரும் முச்சந்தியில் மீண்டும் வலது பக்கமாகத் திரும்பி வரும் வளைவில் இடதுபக்கமாகத் திரும்பி சுமார் 200 மீற்றர் தூரம் சென்றதும் காணப்படும் லிக்னொசெல் வேலைத்தளத்திற்கு அருகில் வலது பக்கமாகத் திரும்பும் பாதையுடன் இணைந்ததாக பாதைக்கு வலது பக்கமாக உள்ள காணியே குறித்த சொத்தாகும்.

***கொடுப்பனவு செய்யும் முறை.***- ஏல விற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர் விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக முழுமையாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 25% (இருபத்தைந்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை வீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும் ;
(7) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

நீதிமன்ற உத்தரவின் பிரகாரமே குறித்த சொத்து விற்பனை செய்யப்படும்.

கொள்முதல் விலையின் மீதி 75% (எழுபத்தைந்து சதவீதம்) விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் குறித்த வழக்கின் இலக்கத்திற்கு வைப்புச் செய்ய வேண்டும்.

இங்கு மேலே குறிப்பிடப்பட்டதற்கு அமைய 30 நாட்களுக்குள் மேலே குறிப்பிடப்பட்ட மொத்தத் தொகையும் செலுத்தத் தவறும் பட்சத்தில் இதுவரை காசாகச் செலுத்தப்பட்டுள்ள தொகை மீளச் செலுத்தப்பட மாட்டாது. குறித்த சொத்தை மீள ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

குறித்த காணி உறுதி உட்பட ஏனைய விபரங்களைப் பரீட்சிக்கவும் மேலதிக விபரங்களை அறிந்துகொள்ளவும்.- "மக்கள் வங்கி, பிரதேச அலுவலகம், மக்கள் வங்கிக் கட்டிடம் (முதலாம் மாடி), இல. 79, மாறவில வீதி, நாத்தாண்டிய" எனும் முகவரியிலுள்ள பிரதேச முகாமையாளரைத் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இல. : 032-2253300 அல்லது 032-2253301 ; தொலைநகல் இல. : 032-2255247.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
123 வருட கால மகோன்னத
சேவையுடன்.

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகமும் காட்சியறையும் :* |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

9-663

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.